**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : DVC 4/2025**

**Prosecution witness : எ.சா.1** **Date : 29.09.2025.**

| | |
|---|---|
| **Name : பிரகாஷ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) என் திருமண நாள், திருமணம் நடந்த இடம் மனுதாரர் சொல்லியுள்ளது சரிதான் என்றால் ஆமாம். திருமணம் இந்து சம்பிரதாயப்படி நடந்ததா என்றால் ஆமாம். இந்த வழக்கில் நான் என் தரப்பில் Assets and Liabilities தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் சேலம் Axis வங்கி குகை கிளையில் சீனியர் மேனேஜராக வேலை செய்கிறேன் என்றால் Deputy Manager ஆக வேலை செய்கிறேன்.

2) என் பிரமாண வாக்குமூலத்தில் சினியர் மேனேஜர் என சொல்லப்பட்டுள்ளது தவறு என்றால் மேனேஜர் என்று தான் கண்டுள்ளது. தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் ஒன்று என்றால் ஆமாம். பொதுவாக மேனேஜருக்கு ஊதியம் ரூ.50,000/– முதல் ரூ.80,000/–தருவார்கள் என்றால் இல்லை. எனக்கு எவ்வளவு ஊதியம் வருகிறது என்றால் ரூ.32,000/– வருகிறது. அதற்கான payslip நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3) எனக்கு சொந்தமாக அசையும் மற்றும் அசையா சொத்து உள்ளதா என்றால் இருக்கும் சாட்சி மீண்டும் என் பெயரில் இல்லை என்று கூறினார். என் தாத்தா கந்தசாமி என்பவரின் பெயரில் 10 சென்ட் நிலம் உள்ளது. என் மீது எந்த சொத்தும் இல்லை என்று நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) என் பெயரில் சொத்துகள் நிறைய உள்ளது என்றும் நான் சொத்துகள் மூலம் ஊதியம் பெற்று வருகிறேன் என்றும் அதனால் தான் அதை மறைத்து நீதிமன்றத்தில் Assets and Liabilities தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து என் மனைவி எத்தனை நாட்கள் என்னுடன் வாழ்ந்ததாக சொல்லியுள்ளேன்ள ன்றால் 3, 4 மாதம் வாழ்ந்ததாக பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளேன்.

5) என் மனைவி என்னுடன் வாழ்ந்த போது அவரை நான் பராமரித்து வந்தேன் என்றால் ஆமாம். நான் என் பிரமாண பத்திரிக்கையில் ஆவணம் தாக்கல் செய்யாமல் வாய்மொழி சாட்சியம் மட்டும் சொல்லியுள்ளேன் என்றாலும் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் சொல்லவில்லை என்றால் ஆமாம். மனுதாரர் திருமணம் நடந்ததாக சொல்லும் அதே நேரத்தில் மனுதாரர் எனக்கு பயனில்லை என்று கூறுவதால் மேற்படி திருமணத்தின் நோக்கம் என்ன என்றால் நான் சேர்ந்து வாழ்வதாக தான் கூறினேன்.

6) மனுதாரர் தரப்பில் அவர் மனதிற்கு ஏற்ப வீட்டை விட்டு வெளியே சென்றால் ஏன் தற்போது பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் மனுதாரரை தான் கேட்க வேண்டும். மனுதாரருடன் சேர்ந்து வாழ காவல் நிலையத்திலோ, வழக்கறிஞர் மூலமாக சட்ட அறிவிப்போ அனுப்பினேனா என்றால் இல்லை.

7) நான் நேரடியாக மனுதாரரிடம் விவாகரத்து கோரி மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் உள்ள விவாகரத்து மனு தாக்கல் செய்தேன் என்றால் அவர் சொல்லி தான் நான் தாக்கல் செய்தேன் என்றும் அது சம்மந்தமாக என் சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் கோரவில்லை என்றால் சரிதான். மனுதாரர் தானாக வீட்டை விட்டு சென்றதற்கு சூழ்நிலை சாட்சி ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8) நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு பெரியவர்கள், மத்தியஸ்தர்கள் என்று பெயர் குறிப்பிடாமல் பொத்தம் பொதுவாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரமாண பத்திரத்தின் படி மனுதாரர் வீட்டை விட்டு வெளியே செல்வதாக

சொல்லியுள்ள நிலையில் என்னிடம் பாதுகாப்பு இல்லாததால் தான் மனுதாரர் வீட்டை விட்டு வெளியே சென்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. எனது சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் என் மனைவி எனக்கு கொடுத்த சான்றொண்ணா மன உளைச்சல் கொடுத்து இடம், தேதி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

9) என் மனைவியின் பெற்றோர் செல்வாக்கு வசதி உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாமல் அவர் பழைய காதல் வாழ்க்கையை நினைத்து கொண்டு எனக்கு மன உளைச்சல் ஏற்படுத்தியது சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆவணம் மூலமாகவோ சாட்சி மூலமாகவோ அல்லது குறிப்பிட்ட பெயர் முகவரி குறிப்பிடாமல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம்.

10) அதே போன்று என் மனைவி என் குடும்பத்தாரை ஊதாசினப்படுத்தி அவமானப்படுத்தி பேசியது குறித்து விவரமாகவும், தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். பெற்றோரின் கட்டாயத்தின் பேரில் என் மனைவி திருமணம் செய்து கொண்டதாக சொல்லியுள்ள நிலையில் போலீசாரிடம் மோசடி செய்து என்னை திருமணம் செய்ததாக புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

11) என் மனைவி மீது அவ்வாறு புகார் இருந்திருந்தால் வேறு ஒருவரை காதலித்ததாகவோ நான்கு நாட்களில் திருமணம் பிடிக்கவில்லை என்று கூறுவது தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கிற்காக கூறப்பட்டுள்ளது என்றும் அவ்வாறு இருந்திருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் குறித்து நான் விவாகரத்து வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. என் மனைவிக்கு எதிராக நான் தாக்கல் செய்த ஆவணத்திற்கு 65B சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த ஆவணம் எங்கு

எடுக்கப்பட்டது குறித்துசாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

12)நவீன உலகத்தில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி எந்த ஆவணங்களையும் தயார் செய்யலாம் என்றால் ஆமாம். உண்மையில் என் மனைவி அந்த வாசகங்கள் குறித்து திட்டியிருந்தால் உரிய சான்றிதழ் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பனே் என்றால் சரியல்ல. பொதுவாக இந்த வழக்கிற்கு என் மனைவி மீது ஒரு குற்றச்சாட்டு வேண்டுமென்பதற்காக நான் ஜோடித்து வேறு வாசகத்தை மாற்றி நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.என் பிரமாண வாக்குமூலத்தில் விவாகரத்து வழக்கு சம்மந்தமாக எந்த எண்ணும் குறிப்பிடாமலும் பொத்தம் பொதுவாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

13) நான் தற்போது வேறு ஒரு திருமணம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வேறு ஒரு திருமணம் செய்யவில்லை என்பதற்காக சான்றாவணமாக கிராம நிர்வாக அலுவலரிம் சான்று பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரர் தரப்பில் நானும், என் குடும்பத்தாரும் தொடர்ந்து வன்கொடுமை, மன கொடுமை, தாங்கொண்ணா கொடுமை செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

14) மனுதாரரை இது வரை பராமரிக்காமல் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு தற்போது வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் எதுவும் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. தற்போது மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்று என்னிடம் சொல்லியுள்ளார் என்றால் நான் சேர்ந்து வாழ தயாராக இல்லை. திருமணம் ஆகி 15 வது நாளில் என் மனைவி தாலியை கழட்டிவிட்ட காரணத்தால் தான் நான் வாழ பிடிக்கவில்லை என்று கூறினார். தாம்பத்ய வாழ்க்கை பூர்த்தியடைந்ததா என்றால் இல்லை.

15) பிரமாண பத்திரிக்கையில் மேற்படி விவரம் சொல்லவில்லை என்றால் ஆமாம். திருமண வாழ்க்கையில் தாம்பத்ய வாழ்க்கை பூர்த்தியாகவில்லை என்று இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சமுதாயத்தில் இரண்டாவது திருமணம் செய்வது வழக்கம் என்றால்இல்லை.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**